தமிழர் பொருண்மியம்
வாரமலர்
TAMILS ECONOMY
விலை : 100/= இதழ் 112 01.06.2025

கைகூடுமா இளமானிப் பட்டம்?

- தென்னை நடவு மேலாண்மை
- கல்விக்கு தடைபோடுவது அடிப்படைப் பொருளாதாரத்திற்கு விதிக்கும் தடையே!
- கரும்பை விரும்பு!
- வெளிநாட்டு வேலைவாய்ப்பு வருமானத்திற்கு புதிய வரி!
- பார்வை

தென்னை நடவு மேலாண்மை

சங்க காலத்தில் தென்னை மரம் நெய்தல் மற்றும் மருதநில ஆற்றங் கரையோர பகுதிகளில் அதிகம் வளரக்கூடியதாக குறிப்பிட்டிருந்தாலும், தற்போது அனைத்து வகையான நிலத்திலும் தென்னை நன்கு வளரக்கூடியதாக இருக்கிறது. தென்னை மரத்தின் அனைத்து பாகங்களும்பயனுள்ளதாக இருப்பதால் இதனை விவசாயிகள் பணம் காய்க்கும் மரமாக பார்க்கிறார்கள். தண்ணீர் வசதி இருந்தால் தென்னை சாகுபடி செய்து அதிக இலாபம் அடையலாம்

தென்னை ரகங்கள்

தென்னையில் குட்டை ரகம், நெட்டை ரகம், ஒட்டு ரகம் மற்றும் செவ்விளநீர் இரகங்கள் இருக்கிறது. குட்டை ரகம் சுமார் 8 மீட்டர் உயரம் வரை வளரக்கூடியது. நான்கு ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கி 25 ஆண்டுகள் வரை பலன் கொடுக்கும். தென்னை நெட்டை ரகம் சுமார் 20 மீட்டர் உயரம் வரை வளரக்கூடியது. 5 ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கி 60 -75 ஆண்டுகள் வரை பலன் கொடுக்கும்.

தென்னையில் ஒட்டு வகை சுமார் 10 - 14 மீ;ட்டர் உயரம் வளரக் கூடியது. 4 ஆண்டுகளில் பலனுக்கு வந்து 40 ஆண்டுகள் வரை காய்க்கக் கூடியது.

தென்னங்கன்று தேர்வு முறை

தென்னங்கன்றுகள் தேர்வு செய்யும் போது வயது முதிர்ந்த கன்றுகளை தேர்வு செய்ய வேண்டும். அதாவது இலைகள் பச்சையாக, குறைந்தது 6 இலைகள் உடைய கன்றுகளை தேர்வு செய்து நடவேண்டும். கன்றுகளில் அழுகள், வாடல், நோய் தாக்கம் இல்லாமல் இருக்க வேண்டும். பூச்சி தாக்கமும் இல்லாமல் இருக்க வேண்டும். நடவு செய்கூடிய பகுதிக்கு ஏற்ற கன்றாகவும், தட்பவெப்ப நிலையை தாக்கி வளரக்கூடியதாக இருக்க வேண்டும்.

நிலம் தயாரித்தல்

வடிகால் வசதியுடைய மணல் கலந்த வண்டல் மண், மணற்பாங்கான பகுதிகள், கரிசல்மண் பகுதிகள் ஆகியவை தென்னை நடவு செய்ய ஏற்ற நிலம். நிலத்தை நன்கு உழுது சமப்படுத்தி நடவு செய்யும் ரகத்திற்கேற்றவாறு இடைவெளி விட்டு 90 செ.மீ அகலம், 90 செ.மீ நீளம் மற்றும் 90 செ.மீ ஆழம் உள்ள குழிகள் வெட்டி தென்னங்கன்றுகளை நடவு செய்யலாம்.

தென்னை பயிரிடும் பருவம்

தென்மேற்கு அல்லது வடகிழக்குப் பருவமழை ஆரம்பமாவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன் தென்னங்கன்றுகளை நட வேண்டும். கோடை காலத்தில் நடவு செய்யக்கூடாது. ஜீன் - ஜீலை டிசம்பர் - ஜனவரி மாதங்களில் தென்னங் கன்று நடுவது ஏற்றது.

தென்னை நடுவதற்குரிய இடைவெளி

நெட்டை மற்றும் ஒட்டு வகை : 7.5 மீட்டர், குட்டை வகை மரங்களுக்கு 5.4 மீ;ட்டரும், வரப்புகளில் வரிசையாக நட

வெய்தால் 6.5 மீட்டர் இடைவெளி விட்டு நடவு செய்ய வேண்டும்.

தென்னங்கன்று நடும் முறை

3 அடி அகலம், 3 அடி நீளம்



மற்றும் 3 அடி ஆழம் உள்ள குழி எடுத்து, அதில் லின்டேன் 10 சத தூளை தூவி எறும்புகளின் தாக்குதலிலிருந்து பாதுகாக்க வேண்டும். கன்று நடுவதற்கு முன் குழியில் ஒரு அடி ஆழத்திற்கு நன்கு மக்கிய தொழு உரம், சிறிதளவு உரித்த தென்னை நார் கழிவு, உயிர் இடுபொருட்கள், செம்மண் மற்றும் மணல் ஆகியவற்றை சமபங்கு கலந்து நிரப்ப வேண்டும். தென்னங்கன்று நடும்போது, அதன் வேர்களை வெட்டிவிட வேண்டும். பின் குழியின் நடுவில் இருக்குமாறு வைத்து குழியிலிருந்து ஏற்கனவே எடுத்த மண்ணை கொண்டே இறுக்கமாக கன்றைச் சுற்றி மூடிவிவேண்டும். கன்றுகளை சூரிய ஒளியில் இருந்து பாதுகாக்க அதன் பக்கவாட்டில் தென்னை ஓலை அல்லது பனை ஓலையை சாய்வாக வெய்யில் படாதவாறு நடவும்.

தென்னையில் நீர் நிர்வாகம்

கன்று நட்ட ஒரு வருடத்திற்கு ஒரு நாள் விட்டு ஒரு நாளும், இரண்டாம் வருடத்திலிருந்து காய் காய்க்கும் வரை இரண்டு வாரத்திற்கு ஒரு முறையும், பின்னர் 10 நாட்களுக்கு ஒரு முறையும் தண்ணீர்ப் பாய்ச்சுதல் அவசியம். கோடை மற்றும் மழையற்ற காலங்களில் மண்ணின் ஈரப்பதத்தை பொறுத்து நீர்ப் பாய்ச்சவும்;. தண்ணீர் வசதியுள்ள தென்னை விவசாயிகள் தென்னை மரத்தை சுற்றி நீர் பாய்ச்சுவதைக் காட்டிலும் தென்னை மரத்திலிருந்து 5 அடி தூரத்தில் மரத்தை சுற்றி வாய்க்கால் அமைத்து தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இவ்வாறு நீர் பாய்ச்சுவதனால் தென்னை மரத்திற்கு தேவையான சத்துக்களை வேர்கள் கிடைக்க செய்யும்.

சொட்டு நீர் பாசனம்

சொட்டு நீர்ப் பாசனம் மூலம் தண்ணீர் பாய்ச்சுவதென்றால் மரம் காய்ப்புக்கு வந்த பின் ஒரு நாளைக்கு ஒரு மரத்திற்கு 100 லிட்டர் தண்ணீர் வீதம் அளிக்க வேண்டும்.

மூடாக்கு அமைத்தல்

தென்னந்தோப்பில் கிடைக்க கூடிய மட்டைகள் மற்றும் உரிமட்டைகளை மரத்தை சுற்றி அடுக்கிவைப்பதால் நீர் விரைவாக ஆவியாதல் தவிர்க்கப்படுகிறது. மேலும் உரிமட்டையில் 0.23 சதம் தழைச்சத்தும், 0.04 சதம் மணிசத்தும், 0.78 சதம் சாம்பல் சத்தும,; 0.8 சதம் சுண்ணாம்பு சத்தும் மற்றும் 0.05 சதம் மெக்னீசியம் சத்தும் இருக்கிறது. இந்த உரிமட்டைகளை மரத்தை சுற்றி அடுக்கிவைத்து மக்கவைத்து பயன்படுத்துவதால் தென்னையில் மகசூல் கணிசமா அதிகரிக்கும். மேலும் உரிமட்டைகள் அதன் எடையை போல 8 மடங்கு தண்ணீரை உறிஞ்சி வைத்துக் கொள்ளும். இதனால் மண்ணின் ஈரம் பாதுகாக்கப்படுகிறது.

உரம் இடுதல்

ஐந்து வருட தென்னை மரத்திற்கு மரத்தைச் சுற்றி 1.8 மீட்டர் அரைவட்ட குழி அமைத்து அதில் 50 கிலோ கம்போஸ்ட் அல்லது மக்கிய தொழுஉரம், அல்லது பசுந்தாள் உரம் இடவேண்டும். இந்த உரத்துடன் 1.3 கிலோ யூரியா, 2 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 2 கிலோ மியூரியேட் ஆப் பொட்டஷ் ஆகிய உரங்களையும் சேர்த்து மண்ணுடன் கலந்து குழியில் இட்டு மூடி பின்பு நர்ப் பாய்ச்ச வேண்டும். மேற்கூறிய உரங்களை வருடத்திற்கு முதல் முறையாக ஜீன் - ஜீலை மற்றும் இரண்டாம் முறையாக டிசம்பர் - ஜனவரி மாதங்களிலும் இடவேண்டும். 2, 3 மற்றும் 4 வயதுடைய மரங்களுக்கு தழை, மணி, மற்றும் சாம்பல் கலந்த உரத்தை முறையே ¼ , ½ , ¾ என்ற அளவில் வருடம் இரண்டு முறை இடவேண்டும்.

தென்னையில் இடை உழவு

வருடத்திற்கு இரு முறை ஜீன் - ஜீலை மற்றும் டிசம்பர் - ஜனவரி மாதங்களில் மரங்களுக்கு இடையே உழுவது அவசியம். இப்படி உழுவதால் களைகள் கட்டுப்படுது;தப்படுகின்றன. கொடுக்கப்பட்ட சத்துக்கள் எளிதில் மரங்களுக்கு கிடைக்கிறது. வேர்களுக்கு நல்ல காற்றோட்டம் கிடைப்பதுடன், புதிய வேர்களின் வளர்ச்சியும் துரி தப்படுத்தப்படுகின்றன. மற்றும் மழைநீர்; புரண்டு ஓடாமல் நிலத்தில் சேருவதால், தென்னை விளைச்சல் அதிகமாகிறது.

தென்னையில் ஊடுபயிர்

முதல் ஐந்து வருடங்களுக்கு நிலக்கடலை, சூரியகாந்தி, எள், மஞ்சள் மற்றும் மரவள்ளி போன்றவற்றை ஊடு பயிர்களாக பயிர் செய்யலாம். நன்கு வளர்ந்த மர நிழல்களில் கொக்கோ, அன்னாசி, வாழை, மிளகு கால்நடை தீவனப்பயிர்கள் மற்றும் மூலிகை பயிர்கள் சிலவற்றையும் (அவுரி, சிறுகுறிஞ்சான், சிறியா நங்கை மற்றும் பல) சாகுபடி செய்யலாம்.

தென்னையில் தழைச்சத்து பற்றாக்குறை

இதன் பற்றாக்குறையால் கன்று களின் வளர்ச்சி குறைந்து இலைகள் வெளிர் மஞ்சள் நிறத்துடன் காணப்படும். காய்கள் காய்ப்பது குறைந்து, காய்கள் முதிர்ச்சியடையும் காலம் அதிகம்

ஆகும். முதிர்ந்த காய்கள் வறண்டு நீர்ச்சத்து குறைந்து காணப்படும். இவ்வாறு நிகழாமல் தடுக்க 25 கிலோ தொழு உரத்துடன் 3ஃ4 கிலோ யூரியா சேர்த்து மரத்தூரில் இருந்து 3 அடி தள்ளி ஜீன் மாதம் ஒரு முறையும் இரண்டாவதாக டிசம்பர் மாதம் மறு முறையும் இட வேண்டும்.

தென்னையில் சாம்பல் சத்து குறைபாடு

மரத்தின் அடி இலைகள் மஞ்சள் நிறமாகி பின்னர் பழுப்பு நிறமாக மாறி கீழ் நோக்கி தொங்கும். நாளடைவில் முதிர்ச்சி அடையும் முன்னரே உதிர்ந்து விடும். தேங்காயின் அளவு சிறுத்து எண்ணக்கையுடன் குறைந்து காணப்படும். இதற்கு 1 கிலோ பொட்டாஷ் உரத்தினை மரத்தில் இருந்து 5 அடி தள்ளி ஜீன் மாதம் ஒரு முறையும், டிசம்பர் இரண்டாம் முறையும் இட்டு நீர் பாய்ச்ச வேண்டும்.

தென்னையில் நுண்ணூட்ட பற்றாக்குறை

தென்னையில் சில அறிகுறிகளை வைத்து நுண்ணூட்ட பற்றாகுறை உள்ளது என்று அறிந்து கொள்ள முடியும். அதாவது மெக்னீசியப் பற்றாக்குறை இருந்தால் இலையின் நுனி மஞ்சள் நிறமாகவும் அடிப்பகுதி பச்சையாகவும் இருக்கும். போரான் குறைபாடு இருக்கும் போது இளம் கன்றுகளில் இலை பிரியாமல், வளரும் குருத்தின் இலைகள் வளராமலும,; பிரியாமல் காணப்படும். மேலும் பிஞ்சுகள் காய்ந்து, குரும்புகள் உதிரும.. வெற்றுத் தேங்காய் அதிகமாகவும், காய்கள் நீளமாகவும் எடை குறைந்தும் காணப்படும். முக்கியமாக காய்களில் வெடிப்புகள் தோன்றும். இதனால் நன்றாக வளர்ந்த தென்னை மரத் திற்கு வருடத்திற்கு ஒரு கிலோ தென்னை நுண்ணூட்டச்சத்து உரத் தினை இடவேண்டும் அல்லது 200 மிலி தென்னை ஊட்டச்சத்து கரை சலை 6 மாதங்களுக்கு ஒரு முறை இளம் வேர்களின் வழியே செலுத்த வேண்டும். இவ்வாறு தென்னைக்கு நுண்ணூட்டச்சத்து கொடுத்து வந்தால் நுண்ணூட்ட பற்றாகுறை வராமல் தவிற்கலாம்.

தென்னை மரங்களுக்கு தேவை யான தண்ணீர், மற்றும் உரம் கொடுத்து பராமரிப்பு செய்து வந்தால் அதிக விலைச்சலை எடுக்க முடியும். பூச்சிகளின் தாக்கம் தென்பட்டால் உடனுக்கு உடன் கட்டுப்படுத்தி மரத்தை பாதுகாக்க வேண்டும்.

கல்விக்கு தடைபோடுவது அடிப்படைப் பொருளாதாரத்திற்கு விதிக்கும் தடையே! சமூகப் பணி இளமானிப் பட்டம் பெறும் கனவை துடைத்தெறிந்த அரச கல்வி நிறுவனம்!

இது பொருளாதார உலகமாகும் எத்துறையை எடுத்துக் கொண்டாலும் அங்கு பொருளாதாரம் தங்கியுள்ளது. பொருளாதாரத்தில் மனிதர்கள் மிளிர்வதற்கு கல்வி இன்றியமையாததாகும். சிறந்த கல்வியைக் கற்றால்தான் எதிர்காலத்தில் பொருளாதார வல்லுனர்களாக மாறுவதற்கு அது வித்திடும் எனலாம். எனினும் தற்போதைய 21 ஆம் நூற்றாண்டிலும், கல்வி கற்க வாரீர் என அழைத்துவிட்டு அக்கல்வியை தங்களுக்கு வழங்க முடியாது என தெரிவிக்கும் அரச கல்வி நிறுவனங்களும் இருக்கத்தான் செய்கின்றன. அரசாங்கம் கல்வித்துறையை ஊக்குவிக்க வேண்டுமல்லவா சிறிய வயதில் கல்வித்துறையை மாணாக்கர்களுக்கு ஊட்டுமிடத்து தான் அவர்கள் எதிர்காலத்தில் இந்த நாட்டின் பொருளாதாரத்தை தீர்மானிக்க முடியும் என்பதே நிஜமாகும்.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் (National Institute of Social Development - NISD) சமூகப் பணி இளமாணிப்பட்டப் பாடநெறிக்காக கடந்த வருடம் விண்ணப்பித்து பணமும் செலுத்தியவர்கள் தற்போது தாம் பரிதாப நிலையில் ஏமாற்றப்பட்டிருப்பதாக தெரிவிக்கிறார்கள்.

சமூகப்பணி இளமாணிப் பட்டப் (Bachelor of Social work – BSW) கடந்த 2024 ஓகஸ்;ட் மாதம் 26 ஆம் திகதி முன் பதிவுக்காக 10000 பணத்தையும் அதற்குப் பின்னர் 2025.01.28 மாணவர்களை அலுவலக முறையில் பதிவு செய்வதற்கான கடிதம் ஒன்றை வட்ஸ்அப் குழுமத்தில் பதிவிட்டு அதில் கூறப்பட்ட விதிமுறைகளுக்கு அமைய தவணைக்கட்டணம் 115000 செலுத்துமாறு கேட்கப்பட்டிருந்தது.

தன்படி அந்த விண்ணப்பதாரிகள் பதிவுக் கட்டணம், தவணைக் கட்டணம் ஆகியவை சேர்த்து ஒரு விண்ணப்பதாரி தலா ஒரு இலட்சத்து 25 ஆயிரம் செலுத்தியுள்ளனர்.


1/1

ජාතික සමාජ සංවර්ධන ආයතනය
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்
NATIONAL INSTITUTE OF SOCIAL DEVELOPMENT
ග්‍රාමීය සංවර්ධන, සමාජ ආරක්ෂණ සහ ප්‍රජා සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டகை அமைச்சு
Ministry of Rural Development, Social Security and Community Empowerment

මගේ අංකය/ எனது இலக்கம் / My No.
ඔබේ අංකය/உமது இலக்கம்/Your No.

2025.01.28

சமூகப்பணி இளமானிப் பட்டப் பாடநெறிக்கான (வெளிவாரி - தமிழ்மொழி மூலம்) - 2024/2025) மாணவர்களை பதிவுசெய்தல்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் மேற்குறிப்பிட்ட பாடநெறியினை தொடர்வதற்கு நீங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருவதோடு 31.01.2025 ஆம் திகதிக்கு முன்னதாக தங்களை பதிவு செய்துகொள்வதற்கு சீதூவை, லியனகேமுல்லை, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் காலை 09.30 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தை **பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் எனும் பெயரில் மக்கள் வங்கி, சுதுவெல்ல எனும் வங்கிக் கிளையிலுள்ள 143-1001-103298038 கணக்கிலக்கத்திற்கு** எந்தவொரு மக்கள் வங்கிக் கிளை ஊடாகவும் வைப்பிலிட்டு வங்கியில் வழங்கப்படும் பற்றுச்சீட்டினை பதிவினை மேற்கொள்ளும் திகதியில் சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் ரூபா. 10000 னை செலுத்திய மாணவர்கள் பதிவுக்கட்டணத்தை செலுத்த அவசியமில்லை என்பதோடு முழு பாடநெறிக் கட்டணத்தில் ரூபா 115,000/- னை 31.01.2025 ஆம் திகதிக்கு முன்னதாக செலுத்தி மிகுதி பாடநெறிக் கட்டணத்தை முதலாம் தவணைப் பரீட்சைக்கு தோற்ற முன்னர் செலுத்துதல் வேண்டும். மேலும் ரூபா. 10000 னை செலுத்திய மாணவர்கள் அன்றைய தினத்தில் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியினை சமர்ப்பித்தல் வேண்டும்.

i.	பதிவுக்கட்டணம்	ரூபா.	10,000.00
ii.	பாடநெறிக் கடட்டணம்	ரூபா.	300,000.00
iii.	மாணவர் கையேடு மற்றும் மாணவர் அடையாள அட்டை	ரூபா.	5,000.00
iv.	மானிட வாழ்விடங்களில் சேவை வழங்கல	ரூபா.	5,000.00
v.	நிறுவன அபிவிருத்திக் கட்டணம	ரூபா.	5,000.00
vi.	**மொத்தம**	ரூபா.	**325,000.00**

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை உறுத்திப்படுத்தி மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டையும் 31.01.2025ஆம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பித்தல் வேண்டும்.

1. தேசிய அடையாள அட்டையும் அதன் பிரதி
2. பிறப்புச் சான்றிதழ் மற்றும் அதன் நிழற் பிரதி
3. கல்விச் சான்றிதழ்களின் (க.பொ.த சா/த மற்றும் க.பொ.த உ/த) அவை ஒவ்வொன்றினதும் நிழற்பிரதிகள்
4. அண்மையில் எடுக்கப்பட்ட ஒரு புகைப்படம் (2"x2 ½)
5. வங்கியில் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு

வெளிவாரியான இளமானி பட்டப்பாடநெறிக்கான ஆரம்ப நிகழ்வு Online மூலம் நடைபெறவிருப்பதால் பாடநெறி இணைப்பாளரால் பின்னர் அறிவிக்கப்படும். அனைத்து மாணவர்களும் பாடநெறி ஆரம்பநிகழ்விற்கு முன்னதாக பதிவுசெய்துகொள்ளல் வேண்டும் என்பதோடு குறிப்பிட்ட திகதிக்கு பின்னரன பதிவுகள் மேற்கொள்ளப்படாது என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலதிக விபரங்களுக்கு எஸ்.ஹரிஹரதாமோதரன் விரிவுரையாளரை (077-5922046) தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஏ.பீ.டீ. தருஷ
பதிவாளர்
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

Dinidu Tharusha
Registrar
National Institute of Social Development
Liyanagemulla, Seeduwa,
Sri Lanka

ලියනගේමුල්ල, සීදූව. | லியனகேமுல்லை, சீதூவை | | Liyanagemulla, Seeduwa
අධ්‍යක්ෂ ජනරාල් பணிப்பாளர் நாயகம் - 2882501 Director General | කාර්යාලය அலுவலகம் - 2882506/7 Office | ෆැක්ස් பெக்ஸ் - 2882502 Fax | ඊ-මේල් இ-மெயில் - E-mail dg@nisd.ac.lk registrar@nisd.ac.lk

Scanned with ACE Scanner

அதன்படி மட்டக்களப்பு மாவட் டத்திலிருந்து மாத்திரம் சுமார் 26 விண்ணப்பதாரிகள் பணம் செலுத்தி விண்ணப்பித்துள்ளனர்;.


Paying-In-Voucher
This form should be completed in triplicate
NISD Copy
NO
Registration Number

National Institute of Social Development
Liyanagemulla, Seeduwa, Sri Lanka.

Please pay at any branch of the Peoples Bank

People's Bank Branch: ....

Manager,
Please credit the amount paid to account no. 143-1001-0-3298038 of the National Institute of Social Development at the Suduwella Branch - Colombo 10.

1. Name with initials:
2. Address:
3. Tel no/s: Office: .... Res: .... Mob:
4. Name of examination/course: BSW – External Tamil Medium (24/25)

Fee Details		Rs.	Cts.
1. Registration fee	Year/s		
2. Course/Tuition fee	Year/s	115 000	00
3. Library fee	Year/s		
4. Library deposit (refundable)			
5. Examination fee	Year and Semester:		
6. Other payments (state particulars)			
Total	Rs.	115 000	00

Total (in words) rupees: one hundred and Fifteen thousand only

Date : .... Signature of Depositor : ....

Received payment mentioned above credited to account no: 143-1001-0-3298038 of National Institute of Social Development, Suduwella Branch - Colombo 10.

Signature of Manager/ Authorized Officer and Bank Seal

2025/04/23 12:42

ஆனால், இவ்வாறு சமூகப் பணி இளமாணிப் பட்டப் பாடநெறிக்காக முறைப்படி விண்ணப்பித்து பணம் செலுத்தி சுமார் ஒரு வருடம் நெருங்கி இருக்கின்ற போதும் இன்னமும் பாடநெறி தொடங்குவதாக எந்தவொரு அறிவித்தல்களும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் இருந்து கிடைக்கவில்லை என விண்ணப்பதாரிகள் தெரிவிக்கின் றனர்.

இதனால் இதுவரையில் கற்கை நெறியும் ஆரம்பிக்கப்படவில்லை, தாம் செலுத்திய பெருந்தொகைப் பணமும் மீண்டும் மீளளிக்கப் படவுமில்லை எனவும், இந்நிலையில் தாம் ஏமாற்றமடைந்திருப்பதாகத் தெரிவித்துள்ள மாணவர்கள், தாம் செலுத்திய பணத்தையாவது மீள ளிக்குமாறு கோரி தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்கு வேண்டு கோள் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

இது பற்றி பாதிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் மேலும் குறிப்பிடுகையில்... தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் நாங்கள் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு, மற்றுமுள்ள ஆவணங்களை பெற்றுக் கொண்டு அவர்களது நிறுவனத்தின் பணம் செலுத்தியதற்கு ஆதாரமாக பற்றுச்சீட்டினை வழங்கிவிட்டு கற்றல் தொடர்பான விவரங்களை அறிவிக்கிறோம் என்று கூறினார்கள்.



பின்னர் காலம் கடந்து செல்வதனால் நாங்கள் பாடத்திட்ட ஒழுங்கிணைப்பாளர்களை தொடர்பு கொண்டோம். நாளுக்கு நாள் வெவ்வேறான கருத்துக்களை பகிர்ந்தார்கள். சரியான பதில் கிடைக்கப்பெறவில்லை. தமிழ் மொழிக்கு பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவரை நாடினோம். அவரும் இன்னொரு அதிகாரியின் இலக்கத்தைத் தந்தார். அவரிடம் விவரம் கேட்ட பொழுது அவர் இக்கற்கை நெறியைத் தொடர்வதா? அல்லது நாம் கற்கை நெறிக்காகச் செலுத்திய கட்டணத்தை மீளளிப்பதா என்று தீர்மானித்து விட்டு சொல்கிறோம் என்றார். இவ்வாறே தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திலுள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணங்கள் சொல்லிக் கொண்டே காலம் கழித்து விட்டார்கள்' என இவ்வாறு மட்டக்களப்பிலிருந்து இக்கற்றை நெறிக்காக பணம் செலுத்திய சுமார் 26 இற்கு மேற்பட்ட விண்ணப்பதாரிகள் தெரிவிக்கின்றனர்.

இது விடயமாக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்திற்கு விண்ணப்பதாரிகள் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது..... நாங்கள் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் லியனகே முல்லை நீதுவையில் அமைந்திருக்கும் நிறுவனத்தில் சமூகப் பணி இளமாணி பாடநெறி வெளிவாரி பட்டப் படிப்பிற்கு (Bachelor of Social Work) கடந்த 26.08.2024 அன்று பதிவு செய்திருந்தோம்.

இந்த பாடநெறி தற்பொழுது உங்கள் நிறுவனத்தினால் தொடங்க முடியாது எனவும், நிர்வாகத்தால் அது இடைநிறுத்தப்பட்டுள்ளது எனவும் உங்கள் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால், திட்டமிட்டபடி நாங்கள் கல்வியைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப்பாடநெறிக்காக நாங்கள் ஒவ்வொருவரும் தலா ரூபா 1,25,000 (ஒரு லட்சத்து இருப்பத்தைந்தாயிரம் ரூபாய்) பணத்தை செலுத்தியுள்ளோம். எனவே, பாடநெறி இன்னமும் உங்கள் நிறுவனத்தினால் தொடங்கப்படவில்லை என்பதனால் அந்தப் பாடநெறிக்காக எங்களால் செலுத்தப்பட்ட 125000 தொகையை எனக்கு மீளளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இப்பட்டப்படிப்பினை ஆரம்பிப்பதாக கூறி இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. ஆரம்பிக்கப்படாமைக்கான காரணமும் கூறப்படவில்லை. பணம் செலுத்தியவர்கள் தொலைபேசி ஊடாக தொடர்பு கொள்கின்றபோது அதற்கான ஒழுங்கான பதிலையும் வழங்குவதில்லை. அது மாத்திரமின்றி இந்த பட்டப்படிப்பினை தொடர்வதற்கான அனுமதி இல்லாமல் இதற்கான விண்ணப்பத்தை பெற்று விண்ணப்பித்தவர்களிடம் இருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு அதற்கான முடிவையும் கூறாமல் உள்ளீர்கள். இந்த செயற்பாடானது உங்களுடைய திறனற்ற நிர்வாகத்தை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. எப்படி உங்களால் ஒரு அனுமதி இல்லாத வெளிவாரி பட்டப்படிப்பினை தொடர்வதற்கான விண்ணப்பத்தை கோர முடியும்.

இதற்கான பதிலை நிற்சயம் கூறியே ஆக வேண்டும். இந்த பட்டப்படிப்பினை பதிவு செய்வதற்கு உங்கள் நிறுவனத்திற்கு வந்திருந்தோம் அதற்கான செலவீனத்தை யார் தருவார்கள்? நீண்ட காலமாகக் காத்திருந்தோம். இதனை நம்பி வேறு எந்த வெளிவாரிப் பட்டப்படிப்புக்கும் விண்ணப்பிக்கவில்லை. விண்ணப்பம் கோரப்பட்ட ஏனைய வெளிவாரிப் பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பிக்கும் காலப்பகுதியும் முடிவடைந்துள்ளது. உங்களுடைய இந்த பொறுப்பற்ற நிர்வாகத் திறமையினால் எங்களுடைய காலமும் பணமும் வீண் விரையமானதுதான் மிதமாகும். நாங்கள் அனுப்பிய ஈமெயிலுக்கோ அல்ல பதிவுத் தபாலுக்கோ இதுவரை உங்களிடமிருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. என அந்த விண்ணப்பதாரிகள் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்திற்கு எழுத்து மூலம் தெரிவிக்கிகின்ற போதிலும் அவர்களுக்கு இதுவரையில் எதுவித பதிலும் உரிய நிறுவனத்திடமிருந்து இதுவரையில் கிடைக்கவில்லை என உரிய விண்ணப்பதாரிகள் தெரிவிக்கின்றனர்.

30.04.2025 அன்று இப்பயிற்சிநெறியினை தொடர்வதற்கு சில தடங்கள் இருப்பதனால் இப்பயிற்சிநெறி நடைபெறாதென்றும் செலுத்திய கட்டணத்தை மீளளிப்போம் என்றும் அறிவுறுத்தப்பட்டோம். ஆனால் தொடர்ச்சியாக அந்நிறுவனத்தை தொடர்பு கொண்டபோது நாம் கற்கைநெறிக்காகச் செலுத்திய தொகையை மீளளிப்பதற்கான செலுத்துவதற்கான அசமந்த போக்கான பதில்கள் தொடர்பு கொள்ளும் அதிகாரிகளிடமிருந்து பதில் வருகின்றன.

மேலும் இன்றைய பொருளாதார சிக்கல்களுக்கு மத்தியில் இத்தொகையை சில மாணவர்கள் கடன் பெற்றும், இன்னும் சிலர் அவர்களிடமிருந்த வாகனங்களை விற்றும், கல்வியில் நாட்டம் கொண்டு தமது எதிர்கால வாழ்வுக்காக பணம் செலுத்தி படிப்பதற்கு முற்பட்டுள்ள போதிலும், அது நிறைவேறாத நிலையில் மன உளைச்சலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளதாக விண்ணப்பதாரிகள் தெரிவிக்கின்றார்கள்.

வ.சக்திவேல்
சமூக ஆய்வாளர்

நலம் தரும் நிலம்!

தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்களை அமைக்கவும் நிலம் வாங்கப்படுகிறது. தங்கும் விடுதிகள், உணவகங்கள், சேமிப்புக் கிடங்குகள் போன்றவற்றைக் கட்டுவதற்கும் நிலம் வாங்கப்படுகிறது. அவ்வளவு ஏன்? வாகன நிறுத்துமிடங்களை அமைத்து வருமானம் ஈட்டுவதற்காகவும்கூட நிலம் வாங்கப்படுகிறது. தற்காலத்தில் முதியோர் இல்லங்கள், குழந்தைகள் காப்பகங்கள் கட்டுவதற்கும் நிலம் வாங்கப்படுகிறது. இவ்வாறாக, மனை வணிகம் என்பது பல்வேறு தேவைகளை உள்ளடக்கிய மிகப்பெரிய முதலீட்டு வாய்ப்புக் களமாக விரிந்துள்ளது.

நிலம் சார்ந்த முதலீட்டில் இவ்வளவு வாய்ப்புகள் இருந்தபோதிலும், வில்லங்கங்களும் இருக்கவே செய்கின்றன. மற்ற எந்த வகை முதலீட்டுக்கும் 'வில்லங்கம் இல்லை சான்றிதழ்' அவசியமில்லை. ஆனால், நிலம் சார்ந்த முதலீட்டுக்கு மட்டுமே வில்லங்கம் ஏதுமில்லை என்பதை உறுதி செய்து, அதற்கான சான்றிதழைப் பெற வேண்டிய அவசியம் உள்ளது. நிலத்தை வாங்கிய பிறகும்கூட அதனை வேறொருவர் ஆக்கிரமிக்காமல் தடுக்க வேலியிட்டும், இதர

வகை பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தும் பாதுகாக்க வேண்டிய அவசியமும் உள்ளது.

இத்தகைய நிலம் சார்ந்த முதலீடு என்பது எவ்வகையாக இருக்க வேண்டும்? ‘நாடு’ என்ற தலைப்பிலான அதிகாரத்தில் நாடு என்பதற்கு தெய்வப் புலவர் கூறியுள்ள ஒரு குறள், நிலம் சார்ந்த முதலீட்டுக்கும்

வாய்ப்புள்ள நிலம் சார்ந்த முதலீட்டில் உரிய எச்சரிக்கையுடன் ஒருவர் இறங்க வேண்டும். இதுகுறித்து ‘பொச்சாவாமை’ என்ற அதிகாரத்தில் அமைந்துள்ள குறள் கூறு வதைக் கேட்போம்.

புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யா திகழ்ந்தார்க் கெழுமையும் இல். (538)

பொருத்தமாக உள்ளது.

நம்மால் தாங்க இயலாது. ஆகையால் நிலத்தை வாங்குவதற்கு முன்பு சட்ட நிபுணர் ஒருவரின் ஆலோசனையைப் பெறுவது நல்லது. வங்கி அல்லது நிதி நிறுவனக் கடனில் மனை அல்லது வீடு வாங்குவதாக இருந்தால் சம்பந்தப்பட்ட வங்கி, நிதி நிறுவன ஆலோசகரே இதனைப் பார்த்துக்கொள்வார்.

10. நிலத்தை வாங்கியவுடன் அதனைப் பத்திரப் பதிவு செய்துகொள்வதுடன், தேவைப்பட்டால் பட்டா போன்ற சான்றி தழ்களையும் உடனடியாக வாங்க வேண்டும். வீடு கட்டும்பட்சத்தில், உரிய காலகட்டத்தில் சொத்து வரியை முறையாகச் செலுத்தி வர வேண்டும்.

ஆகையால், பெரிய அளவில் பயன் பாட்டையும், லாபத்தையும் தருவதைப்போல பேரிழப்பையும், இழுக்கையும் தந்துவிட

புகழ்ச்சிக்கு உரியனவாக சான்றோர் கூறியிருப்பதை நாமும் போற்றி, அந்த வழிமுறையில் செயல்பட வேண்டும்,

அவ்வாறு செய்யாமல் இகழ்ந்த வர்களுக்கு அதாவது மறந்தவர்களுக்கு ஏழு பிறப்பிலும் நன்மை இல்லை என்று இக்குற ளுக்குப் பொருள். இதனையொட்டி, நிலத் தில் முதலீடு செய்வோரும் உரியன வற்றை ஆராய்ந்து, கடைப்பிடிக்க வேண் டிய வழிமுறைகளின்படி தமது முதலீடு களை மேற்கொள்ள வேண்டும்.

கரும்பை விரும்பு!

கரும்பு சாப்பிட்டால் கல்லீரல் ஆரோக்கியமாக இருக்குமாம்.. ஆயுர்வேதம் சொல்றதை கேளுங்கள்..!

கரும்பு. நார்ச்சத்தும் இனிப்புச்சத்தும் நிறைந்த இயற்கை தந்த கொடை. பொங்கல் பண்டிகைகளில் வீட்டை அலங்கரிக்க இனிப்பு மிகுந்த கரும்புக்கும் இடம் உண்டு. ஆனால் இந்த கரும்பு ஊட்டச்சத்து மிகுந்தது. வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் நிறைந்தது. முதன்மையானது. தற்போது சாலையோர கடைகளில் கரும்புச்சாறு கடைகளை பார்க்க முடிகிறது. ஆற்றல் அளிக்கும் கரும்பு உடலுக்கு செய்யும் நன்மைகள் என்ன, ஆயுர்வேதத்தில் இது எப்படி பார்க்கப்படுகிறது என்பதை இப்போது தெரிந்துகொள்வோம்.

கரும்பின் தாவரவியல் பெயர் *Saccharum officinarum* ஆகும். கரும்பு உடனடியாக புத்துணர்ச்சி அளிக்க கூடியது. கோடைக்காலத்தில் வெப்பத்தை தணிக்க உதவும் அற்புதமான பானம் இது. கரும்பில் இரும்பு, மெக்னீசியம், கால்சியம் மற்றும் பிற எலக்ட்ரோலைட்டுகள் நிறைந்துள்ளன. இது ஆன் டி ஆக்ஸிடண்ட் கொண்டுள்ளதால் நோய்த்தொற்றுகளை எதிர்த்து போராடவும் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும் உதவுகிறது. ஜலதோஷம் போன்ற தொற்று குணப்படுத்த செய்கிறது

கரும்பு சாப்பிடுவதால் வயதான செயல்முறை மெதுவாக்குகிறது, எடை இழப்பை ஊக்குவிக்கிறது, இரத்த சர்க்கரை அளவை ஒழுங்குபடுத்துகிறது. மன அழுத்தத்தை சரி செய்கிறது. இதய ஆரோக்கியத்தை ஆதரிக்கிறது. சிறுநீரக கற்களை எதிர்த்து போராடுகிறது. பற்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.

ஆயுர்வேதத்தில் கரும்பு எப்படி பார்க்கப்படுகிறது?

கரும்புச்சாறு ஆரோக்கியத்துக்கு நன்மை பயக்கும் இயற்கை பானமாக பார்க்கப்படுகிறது. இது இயற்கையாகவே குளிர்ச்சியை அளிக்கும் ஆரோக்கிய பானம் ஆகும். இதன் இயற்கை டையூரிடிக் பண்புகள் அடங்கியுள்ளது. ஆயுர்வேதத்தின் படி உடலில் வாதம்,

பித்தம், கபம் தோஷம் உடலில் சமநிலையில் இருக்க வேண்டும். கரும்பு சாறு எடுப்பது கப தோஷத்தை அதிகரிக்கிறது. அதே நேரம் இது வாதம் மற்றும் பித்தம் இரண்டையும் அமைதிப்படுத்துகிறது. ஆயுர்வேதம் கரும்பு சாறு சாப்பிடுவதை ஊக்குவிக்கிறது. இது உடல் இழந்த எலக்ட்ரோலைட்டுகள் மற்றும் ஊட்டச்சத்துக்களை நிரப்புகிறது. மஞ்சள் காமாலை அபாயத்தை குறைத்து கல்லீரல் செயல்பாடுகளை மேம்படுத்தும் தன்மை கொண்டது என்று ஆயுர்வேதம் விவரிக்கிறது.

கரும்பு முழுமையான நீர்ச்சத்து உள்ளடக்கியுள்ளது. இதன் இனிப்பை அதிகரிக்கும் வகையில் இயற்கையான சுக்ரோஸ் நிரப்பப்பட்டுள்ளது. கார்போஹைட்ரேட்டுகள், அத்தியாவசிய அமினோ அமிலங்கள், வைட்டமின் சி, வைட்டமின் பி1, வைட்டமின் பி2 மற்றும் வைட்டமின் பி6 போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. மேலும் இது கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு, சிட்ரிக் அமிலம் போன்ற தாதுக்களும் நிறைந்துள்ளன. இவை எல்லாமே உடல் ஆரோக்கியத்துக்கு இன்றியமையான ஊட்டச்சத்துக்கள் ஆகும்.

28 கிராம் கரும்புச்சாற்றில் ஆற்றல் - 113.43 கலோரி, புரதம் -0.2 கிராம், கொழுப்பு -0.66 கிரா, கார்போஹைட்ரேட்டுகள் - 25.4 கிராம் வரை உள்ளது.

சிறுநீர்ப்பாதை தொற்றுக்கு கரும்பு எப்படி உதவுகிறது?

ஆயுர்வேதத்தில் சிறுநீர்ப்பாதை தொற்று முத்ராலா என்று அழைக்கப்படுகிறது, இவர்கள் கரும்பு சாப்பிடுவதன் மூலம் இந்த சிறுநீர்ப்பாதை தொற்று மற்றும் வீக்கத்தை தணிக்க உதவுகிறது. மேலும் சிறுநீர் ஓட்டத்தை எளிதாக்குகிறது. கரும்பு இயற்கை டையூரிடிக் ஆக செயல்படுவதால் உடல் நச்சுத்தன்மையை அகற்றி சிறுநீரகங்களை ஆரோக்கியமாக வைக்க செய்கிறது.

கரும்பு சாறில் எலுமிச்சை மற்றும் இஞ்சி சாறு கலந்து குடிப்பது சிறுநீர்ப்பாதை தொற்று அறிகுறி குறைக்க செய்கிறது. சிறுநீர்ப்பாதை தொற்றால் அடிக்கடி அவதிப்படுபவர்கள் கரும்பு சாப்பிடுவது இந்த அபாயத்தை தவிர்க்க உதவும்.

கல்லீரல் ஆரோக்கியத்தை மேம் படுத்த கரும்பு உதவும்

கரும்பு உடலில் பித்த தோஷம் அதிகரிப்பதை தடுக்கிறது. சமநிலையற்ற இரத்தம் அல்லது பித்த தோஷம் என்பது கல்லீரலை பாதிக்கிறது. இதனால் மஞ்சள் காமாலை அறிகுறிகள் தென்படும். இந்நிலையில் கல்லீரலை புதுப்பித்து மஞ்சள் காமாலை சிகிச்சைக்கு பரவலாக கரும்பு பயன்படுத்தப்படுகிறது. கரும்பு ஆக்ஸினேற்றியாகும் இது தொற்றுக்கு எதிராக செயல்படுகிறது. உடலின் பிலிரூபின் அளவை பராமரிக்கிறது. இதனால் உடல் இழந்த புரதங்கள் நிரப்பப்படுகிறது. உடலில் பித்த தோஷம் இருப்பவர்கள் அவ்வபோது கரும்பு சாறு குடிப்பது பித்தத்தை சமநிலையில் வைக்க உதவும்.

ஆரோக்கியமான தோலை பாதுகாக்க கரும்பு உதவும்

ஆல்பா ஹைட்ராக்ஸி அமிலத்தின் செழுமை கரும்பில் நிறைவாக உள்ளதால் இது சருமத்தை அழகாக வைத்திருக்கிறது. கரும்பு சருமத்தை மென்மையாக மிருதுவான ஒன்றாக மாற்றுகிறது. சருமத்தை ஈரப்பதமாக வைத்திருக்கும் ஆன் டி ஆஜிங் மாஸ்க் ஆக இது செயல்படுகிறது. கரும்புச்சாற்றை மேற்பூச்சாக முகத்தில் பயன்படுத்துவதன் மூலம் முகப்பருவை எளிதாக்க செய்யலாம்.

சருமத்தில் காயம் இருந்தாலும் அவை ஆறுவதற்கு செயல்முறையை துரிதப்படுத்துகிறது. இந்த சாற்றில் இயற்கையான சுக்ரோஸ் நிறைந்துள்ளது. இதனால் விரைவில் காயம் குணப்படுத்தப்படுகிறது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு வருமானத்திற்கு புதிய வரி!

வெளிநாட்டு வேலைவாய்ப்பு வருமானத்திற்கான புதிய வரி சட்டம் - 2025 திருத்தச்சட்டத்தின் முக்கிய அம்சங்கள்.

2025ஆம் ஆண்டின் இலங்கை வரிவிதிப்பு சட்டத் திருத்தம் எண் 2 ஒரு முக்கியமான விடையத்தைக் கூறுகின்றது. இது வெளிநாட்டில் வேலை செய்து வருமானம் ஈட்டும் இலங்கை குடிமக்களுக்கு புதிய வரிக் கட்டுப்பாடுகளை வகுத்துள்ளது. இந்த சட்டத்தின் முக்கிய அம்சமாக, இப்போது இலங்கையின் இருப்பிட குடிமக்கள் (Resident Individuals) வெளிநாட்டு வேலைவாய்ப்பு வருமானத்திற்காக அதிகபட்சமாக 15% வரி செலுத்த வேண்டும் (சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு).

இந்த திருத்தம் ஏன் முக்கியம்?

இலங்கைக் குடிமக்கள் வெளிநாட்டில் வேலைசெய்து ஈட்டும் வருமானம் ஏற்கெனவே வரிவசூலிக்குள்ளாக இருந்தாலும் நடைமுறை விளக்கம் மற்றும் கட்டுப்பாடுகள் தெளிவாக இருக்கவில்லை. இதனால், வரி செலுத்துவோர் குழப்பமடையும் நிலை ஏற்பட்டது. இப்போது, புதிய சட்டம் மூலம் அந்த குழப்பத்திற்கு தீர்வு வழங்கப்படுகின்றது.

யாருக்கு இந்தச் சட்டம் பொருந்தும்?

இந்த சட்டம் கீழ்காணும் மக்களுக்கு பொருந்தும்:

- *இலங்கையில் வாழ்ந்து, வெளிநாட்டு நிறுவனங்களுக்காக தொலைதொடர்பு மூலம் வேலை செய்பவர்கள்;*

- வெளிநாட்டில் தற்காலிகமாக வேலை செய்து வருமானத்தை இலங்கைக்கு அனுப்புவோர்.

- இரட்டைக் கைமாற்று வேலைசார்ந்த ஒப்பந்தங்களில் ஈடுபடுவோர் குடியிருப்பாளர்கள் அல்லாதவர்கள் (Non-re sidents) இது பொருந்தாது.

முக்கிய அம்சங்கள்

1) 15% வரி உச்சவரம்பு- இந்த திருத்தத்தின் படி, வெளிநாட்டு வேலைவாய்ப்பு வருமானத்திற்கு அதிகபட்சமாக 15% வரி மட்டுமே விதிக்கப்படும். இது உயர் வருமானம் ஈட்டுபவர்களுக்கு நிவாரணமாக அமைகின்றது.

2) புதிய APIT அட்டவணை 08- இப்போது வருமானம் மாதந்தோறும் Advance Personal Income Tax (APIT) அட்டவணை 08 மூலம் கணக்கிடப்பட வேண்டும். தனிநபர்கள் தாங்களே இது மூலம் வரியை கணக்கிட்டு செலுத்த வேண்டும் / தொழிலாளர்கள் ஊதியத்திலிருந்து கழித்து செலுத்தலாம்.

3) மாதாந்திர வரி செலுத்தல்- ஒவ்வொரு மாதத்திற்குமான வரி, அடுத்த மாதம் 15ஆம் தேதிக்குள் இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு (Inland Revenue Department (IRD)) செலுத்த வேண்டும். உதாரணமாக, மே மாத வருமானத்திற்கான வரி, ஜூன் 15க்குள் செலுத்தப்பட வேண்டும்.

வரி செலுத்துவோர் கவனிக்க வேண்டியவை

- APIT இல் பதிவு செய்திருக்க வேண்டும்
- வேலை ஒப்பந்தங்கள், ஊதிய ரசீது, வங்கி அனுப்பல் தகவல்களை வைத்திருக்க வேண்டும்.
- அட்டவணை 08 பயன்படுத்தி மாதாந்திர வரியை கணக்கிட வேண்டும்
- உரிய வரியினை முறையாக செலுத்த வேண்டும்.
- வருடாந்திர வரி அறிக்கையில் வெளிநாட்டு வருமானத்தையும் தெரிவிக்க வேண்டும்.

பரிந்துரைகள்

தனிநபர்களுக்காக:

- தொழில்முறை வரி ஆலோசனைகளை பெறுங்கள்
- தங்கள் வருமான ஓட்டத்தை திட்ட மிடுங்கள்
- மாதந்தோறும் சரியாக வரி செலுத்துங்கள்

தொழில்கள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்காக:

- ஊழியர்களுடன் தெளிவான தகவல்களை பகிருங்கள்
- செலுத்தும் கணக்கியல் முறைகளை சரி பார்க்கவும்

இந்த சட்டத் திருத்தம் வெளிநாட்டு வேலை வாய்ப்பிலுள்ள இலங்கை குடிமக் களுக்கு வரிவிதிப்பை நேர்மையானதாகவும், நிரந்தரமானதாகவும் மாற்றுகின்றது. இது வருமானத்தை கண்காணித்து வரியைப் பெற IRD முயற்சிக்கும் ஒரு திட்டமிட்ட செயலாகும். இனி வெளிநாட்டு வேலை வாய்ப்பு வருமானம் குறித்த வரி கட்டுப் பாடுகள் தெளிவாகும். தொழில்முறை ஆலோ சனைகளுடன் இணைந்து, உங்கள் வரிச் செலுத்தல்களை நேரத்திற்குள் மேற்கொள்வது மிக முக்கியம்.

சிறப்பு கவனம்: வெளிநாட்டு வேலை வருமானத்தில் வரிவிலக்கு பெற்றிருந்த வர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள்

- 2025 ஆம் ஆண்டின் வரிவிதிப்பு சட்ட திருத்தம் எண் 2- இது அமுலுக்கு வந்ததைத் தொடர்ந்து, இலங்கையின் இருப்பிட குடிமக்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு வருமானத்தில் கிடைத் திருந்த முழுமையான வரிவிலக்கு இனி பொருந்தாது. இதனால், இதுவரை வரி விலக்கு பெற்றிருந்தவர்களுக்கு முக்கிய மான மாற்றங்கள் ஏற்படுகின்றன:

- முழுமையான வரிவிலக்கு இழப்பு- இனி, வெளிநாட்டு வேலைவாய்ப்பு வருமானம் அதிகபட்சமாக 15% வரி உட்படச் செய்யப்படும். இவை கீழ்காணும் சந்தர்ப்பங்களிலும் பொருந்தும்:

- புதிய வரிச்சுமை - இதுவரை எந்த விதமான வரியும் செலுத்தாமல் இருந்த வர்கள் இப்போது:

  - APIT பதிவு செய்யவேண்டும்.

  - அட்டவணை 08 பயன்படுத்தி மாதந் தோறும் வரியை கணக்கிடவேண்டும்.

  - 15ஆம் தேதிக்குள் வரியை இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டும்.

இது இவர்களுக்கான நிகர வருமானத்தில் குறைவு ஏற்படுத்தும்.

- விதிவிலக்கு இல்லாத கடமைகள்- இனி வரிவிலக்கு இல்லை என்பதால் கீழ்காணும் நடவடிக்கைகள் கட்டாயமாக வேண்டும்:

  o வேலை ஒப்பந்தங்கள், சம்பள ரசீதுகள், வங்கியின் அனுப்பல் சான்றுகள் போன்ற ஆவணங்களை வைத்திருக்க வேண்டும்

  o மாதாந்திர வரி செலுத்தல் மற்றும் வருடாந்திர வரி அறிக்கைகள் தாக்கல் செய்ய வேண்டும்

  o தவறுகள் மற்றும் பின்வாங்கல் காரணமாக அபராதங்கள் விதிக்கப்படலாம்.

- புதிய வரித் திட்டமிடல் தேவைகள்- முந்தைய நிலைபேற்புகளால் தற்போது பணியாளர்கள்:

  - தங்கள் இருப்பிட நிலையை மதிப்பீடு செய்ய வேண்டியுள்ளது.

  - இரட்டைப் பாகைப்படு ஒப்பந்தங்கள் உள்ள நாடுகளின் வழியாக வேலைமுறை அமைப்பை பரிசீலிக்கவேண்டும்.

  - வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஊதிய ஒப்பந்தங்களை மீளாய்வு செய்ய வேண்டிய நிலை.

- இரட்டை வரி ஒப்பந்தங்கள் (Double Tax Agreements - DTAs)- வெளிநாடுகளில் ஏற்கனவே செலுத்தப்பட்ட வரியை இலங்கை வரிக்கெதிராக கழிக்கலாம்.

ஆனால், இது தகுந்த ஆவணங்கள் மூலம் மட்டுமே சாத்தியமாகும். தவறான அறிக்கைகள் இரட்டை வரிவிதிப்பை ஏற்படுத்தும்.

மின்மையை காட்டலாம்.

- சிலர் வருமானத்தை வெளிநாட்டிலேயே வைத்துக்கொள்வது அல்லது அதிகாரப் பூர்வமற்ற முறைகள் (போன்றது ஹவாலா/ உண்டியல்) மூலம் அனுப்புவது போன்ற

விவரம்	திருத்தத்திற்கு முன்	திருத்தத்திற்கு பிறகு
வெளிநாட்டு வேலை வருமானத்தில் வரி	பெரும்பாலும் விலக்கு	அதிகபட்சம் 15% வரி
வரி தாக்கல்	பெரும்பாலும் தேவையில்லை	மாதந்தோறும் மற்றும் வருடாந்திரம் கட்டாயம்
வரி செலுத்தும் தேதிகள்	இல்லை	அடுத்த மாதம் 15ஆம் தேதிக்குள்
வரி திட்டமிடல்	வரிவிலக்கு அடிப்படையில்	புதிய திட்டமிடல் தேவை
இரட்டை வரிவிலக்கு	முக்கியமில்லை	இப்போது முக்கியம்

ஒப்பீட்டு அட்டவணை முக்கிய அறிவுரை:

இலங்கை குடிமக்கள் மற்றும் இருப் பிடத்தை வைத்திருப்பவர்கள் வெளிநாட்டி லிருந்து வருமானம் பெறுகிறீர்கள் என்றால் தற்போது உங்கள் வரிச் சுமைகளை மீளாய்வு செய்ய வேண்டிய நேரம் இது தான். இதுவரை "விலக்கு" என நம்பப்பட்ட வருமானங்கள் இனி வரிவசூலிக்குட்பட்டவை. தொழில்முறை வரி ஆலோசனைகளை பெறுவது முக்கியம்.

2025 ஆம் ஆண்டின் 2 ஆம் எண் உள்நாட்டு வருவாய் (திருத்தச்) சட்டம், வசிக்கும் தனிநபர்கள் ஈட்டும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வருமானத்திற்கு அதிகபட் சமாக 15% வரி விதிக்கிறது, இது இலங்கைக்கு வரும் வெளிநாட்டு நாணய வர வில் கலவையான தாக்கங்களை ஏற்படுத் தும். குறிப்பாக பின்வருவனவற்றை அவதா னிக்கலாம்:

ஏற்படக்கூடிய எதிர்மறை தாக்கங்கள்

1. முழுமையாக வருமானம் அனுப்பும் ஊக்கமின்மை
   - வெளிநாட்டில் வேலை செய்பவர்கள், இலங்கையில் வரி செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டால் அவர்களின் முழு வருமானத்தையும் அதிகாரப்பூர்வ வங்கி முறைமையின் கீழ் அனுப்புவதில் ஊக்க விருப்பங்களை தேர்ந்தெடுப்பதனால், அதிகாரப்பூர்வ நாணய வருவாய் குறை வடையக்கூடும்.
2. மீண்டும் இலங்கை நாட்டிற்கு வந்து கொண்டிருக்கும் குடிமக்களுக்கு தடையாய் அமையும்.
   - வெளிநாடுகளில் தற்காலிகமாக வேலை செய்து கொண்டு நாட்டிற்கு திரும்பியுள்ள வர்கள் இந்த வரிப்பொறுப்புகளை எதிர் கொள்ள வேண்டும். இதனால் இலங்கை யில் தங்குவதில் தயக்கம் காட்டலாம்.
   - இது திறமையான பணியாளர்களின் வெளி யேற்றத்தை உருவாக்கலாம் அல்லது திரும்பி வருவதில் தாமதத்தை ஏற்படுத் தும்.
3. நிர்வாக சிக்கலால் தவிர்ப்பு மனப்பான்மை

மாதாந்திர APIT தாக்கல் மற்றும் பணம் அனுப்பும் தேவைகள் வருமானம் ஈட்டுபவர்களுக்கு சுமையாக இருக்கலாம், இதனால் சிலர் வருமானத்தை குறைத்து மதிப்பிடவோ அல்லது பணம் அனுப்புவதை முற்றிலுமாக தவிர்க்கவோ தூண்டப்படலாம்.

நன்மை தரக்கூடிய நேர்மறை தாக்கங்கள்

1. அதிகாரப்பூர்வ வழிகளில் பணம் அனுப்ப ஊக்கம்

- *Double Tax Relief* (இரட்டை வரிவிலக்கு) பெற வேண்டுமானால், பணியாளர்கள் அதிகாரப்பூர்வ வங்கிச் சானல்கள் வழியாகவே பணத்தை அனுப்ப வேண்டிய கட்டாயம் ஏற்படும். இது நாடளாவிய நாணய வருவாயை மேம்படுத்தும்.

- இது அவர்களை சட்டப்பூர்வ வரிச் சூழலுக்குள் கொண்டு வரக்கூடும்.

2. அதிக அந்நிய செலாவணி இழப்பு இல்லாமல் அதிகரித்த வருவாய்.

- 15% வரி வரம்பு என்பது நிச்சயமுள்ள மற்றும் அதிகமில்லாத வரிச்சுமையாக இருக்கின்றது; எனவே பலர் எப்படி யாவது பணத்தை அனுப்புவதை தொடர் வார்கள்.

- தெளிவான மற்றும் திட்டமிட்ட விதிகளால், சிலர் அதிகாரப்பூர்வ முறைகளைப் பின்பற்றும் நம்பிக்கையுடன் செயற்படலாம்.

நீண்ட கால விளைவுகள் கீழ்காணும் அம்சங்களைப் பொறுத்தது:

- பொதுமக்களுக்கு தகவல் பரப்புதல் மற்றும் *Double Tax Relief* பற்றிய விழிப்புணர்வு.

- உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற அமுலாக்கத்தின் கடுமை.

- திறமையுள்ள பணியாளர்களுக்கு சர்வதேச போட்டி (தாழ்ந்த வரிச் சூழல்கள்).

- அரசு 15% வரி வரம்பு என்பது நியாயமானது என்பதைக் தெளிவாக விளக்கும் வகையில் செயல்படுவது.

குறுகிய காலத்தில், வெளிநாட்டு பண அனுப்புதல்களில் சில மந்தநிலை அல்லது தயக்கம் ஏற்படலாம். ஆனால், தெளிவான நடைமுறைகள், விளக்கப் பிரசாரங்கள் மற்றும் சீரான செயல்பாடு இருந்தால், நீண்டகாலத்தில் இது அதிகாரப்பூர்வ மற்றும் வரிவசூலிக்குட்பட்ட நாணய வருவாயை நிலைப்படுத்தவும், மேம்படுத்தவும் வழிவகுக்கும்.

2025 ஆம் ஆண்டின் வரிவிதிப்பு திருத்தச் சட்டம் எண் 2 இலங்கையின் வரி சட்டங்களில் ஒரு முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இது, இலங்கை இருப்பிட குடிமக்களின் வெளிநாட்டு வேலை வருமானத்திற்கான அதிகபட்ச 15% வரி வரம்பை அறிமுகப்படுத்துவதன் மூலம், வரிவசூலியின் பரப்பலை விரிவுபடுத்தும் நோக்கத்தைக் குறிக்கின்றது. இத்திருத்தம், சட்ட ரீதியான ஒரு மாற்றம் மட்டுமல்ல, வெளிநாட்டு வேலை வாய்ப்பு வருமானம் ஈட்டும் இலங்கை குடிமக்களுக்கு இது வாழ்வியற்கைக் குறியீடு ஆகும்.

இப்போது அனைவரும்:

- தங்களின் வரி இருப்பிட நிலையை மதிப்பீடு செய்ய வேண்டும்,

- வெளிநாட்டு வருமானத்தை சரியாக அறிவிக்க வேண்டும்,

- புதிய *APIT* கட்டாயங்களை பின்பற்ற வேண்டும்,

- மேலும் தொழில்முறை வரி ஆலோசனைகளை பெற தயாராக இருக்க வேண்டும்.

வரிவிதிப்பில் பின்வாங்கும் நடவடிக்கைகள் தற்போதைய வரி அமைப்பின் கீழ் அபராதங்களை ஏற்படுத்தக்கூடும் என்பதால், செயல்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். உலகளாவிய வருமான பொறுப்புமிக்க நேரத்தில், இன்றைய நிதிக் கடமைகளை புரிந்து செயற்படுவது தான் நாளைய நிதிச் சுதந்திரத்திற்கான பாதுகாப்பு.

■

ஸ்ரீ AGS. சுவாமிநாதன் சர்மா
MBA (UK), FCA (SL), FCMA (UK), FCPA (Aust.)
நிர்வாக இயக்குனர் @ *A. G. Sarma & Co., (CA)*
பட்டயக்கணக்காளர், வரி மற்றும் முகாமைத்துவ ஆலோசகர்

பார்வை

அது ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பதுகளின் ஆரம்பம். விவசாயியான என் தந்தை எமக்கு வேலை செய்வதற்காக ஒரு சோடி எருதுகளை வாங்க முடிவு செய்தார். அதற்கான முதல் அவரிடம் இல்லை அதனால் என்தாயாரிடம் உதவி கேட்டார். ஆம்மாவும் மறுப்புக்டகூறாமல் தனது நான்கு பவுண் எடையுள்ள சங்கிலியை கொடுத்தாள்.

அதை மூன்று பவுணுக்கு அடைவு வைத்து காசை எடுத்துக்கொண்டு ‘கெபிரிகொலாவ’ வீதி வழியாக சிங்கள நாட்டுக்கு சென்றார். சென்றார் என்றால் கால்நடையாகத்தான். மதவாச்சி வீதியில் திரும்பி ஒரு கிராமத்தின் சேனையில் மேய்ந்து கொண்டிருந்த மாடுகளில் அவரது விருப்புக்கு ஏற்ற வகையில் மாடுகள் மேய்ந்து கொண்டிருந்ததாம். எனவே அங்கே வீதியில் போன வழிப்போக்கரை மறித்து அந்த மாடுகளின் உரிமையாளர் யாரெனக் கேட்டாh.; அவர் அவற்றின் உரிமையாளரின் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய் விட்டார். அந்த ஒறணை மாடுகளை இரண்டு பவுணுக்கு வாங்கினார் அப்பா. அங்கிருந்து மறுபடியும் ஊருக்கு கால்நடைதான.; அப்பாவுடன் எனது

மானும் போயிருந்தார். அவர்கள் மாடுகளை பிடிகயிற்றில் அதாவது தாங்கள் கொண்டு போன கயிற்றில் மாற்றிக்கட்டி பிடிக்க வேண்டும். மாடு விற்பனையை மாடு வாங்கினேன் மாடு விற்றேன் என்று சொல்வதில்லை. மாட்டை விற்பவர் அதை மாறிவிட்டேன் என்பார். வாங்கியவர் 'மாடு அவிழ்த்தேன்' என்பார்.

சுமார் இருபது மைல்களுக்கப்பால் உள்ள கிராமத்திலிருந்து புதிய இடத்துக்கு அந்த மாடுகளை கால் நடையாகவே கொண்டுவருவார் வெறும் பிடிகயிற்றில் எந்த மறுப்பும் இல்லாமல் அந்த மாடுகள் நடந்து வர, அதற்கு போட்டிருக்கும், மூக்கணாங் கயிறும் ஒரு காரணம். அந்த மாடுகள் மிக லட்சணமான மாடுகள். ஒன்று கருஞ்சிவலை மற்றது தனிக் கபில நிறம். கொடிச்சி வாலும் பட்டிபார்த்த கொம்பும் கபில நிறத்திலிருந்தாலும், ஒரு பூவரச இலை வடிவில் ஒரு வெள்ளை நிறச்சுட்டி நெற்றியில் பளிச்சிட்டது. மற்றது சாட்டைக்கொம்பன.; ஒரு விதமான முதுகுச்சுழி அமைந்தது. அதன்வாலும் கொடிச்சிதான். அழகான திமில் அமைந்து லட்சணமாக இருந்தது. அதை அப்பா கொண்டுவந்து கட்டியதுமே அயலவர்கள் வந்து பார்த்தாகள். 'ஙா... கந்தப்பண்ணை சிங்கள நாட்டால மாடவுட்டுக் கொண்டு வந்திருக்கிறார் தொங்கலா இருக்கு' என்று பாராட்டினார்கள். சுக்குறுவன் மட்டும். (சுக்கிரீவன் என்ற அந்தப்பெயர் கூப்பிடுபவர்களின் வாயில் விழுந்து சுக்குறுவனாக கோணிப்போய்விட்டது.)

'அண்ணை இதை எனக்குத்தா நீ வேற போய் அவிழ்' என்று கெஞ்சினான். அது இரண்டு பவுணுக்கு வாங்கினாலும் இங்கே தான் இரண்டரைப்பவுணுக்கு வாங்கியதாகவே அவன் சொல்லியிருந்தான். இனி போக்கு வரவுக்கு இரண்டாள் கூலியும் சேர்த்து அவற்றை தட்டாம முட்டாம மூன்று பவுணுக்கு விற்றான். இது ஒரு கணிசமான லாபம். மறுநாளே மச்சானையும் கூட்டிக்கொண்டு போய் இம்முறை ஈரணை மாடு வாங்கினான் .நலமடிக்காத நாம்பனுகள் சும்மா எம்ஜியார் மாதிரி சிலுப்பிக்கொண்டு நின்ற அழகிய சோடிகள். (ஒரு இணை ஓறணை எனவும்,

இரு இணை ஈரணை எனவும் கொள்க) அப்போது அவருடைய முப்பது பவுண் காசு நாலரைப்பவுண் காசாக மாறியது. எனவே மனைவியின் நகையை மீட்டதுடன் உடனேயே திரும்பவும் போய் பதினைந்து பவுணுக்கு மிக லட்சணமான நாம்பன்கள் இரண்டை கொண்டுவந்தான் அடுத்து மாரிகாலம் தொடங்க விதைப்புக்கான வேலைகளை தொடங்க வேண்டி இருந்தது. ஒரு பவுண் காசென்பது பத்து ரூவாவாகும். அது நாப்பதுகளில். இப்போது பவுண் பதினாலு ரூபா ஆகிவிட்டாலும் பத்து ரூபாவை ஒரு பவுண் என்று கூறுவதே வழக்கம். என் பூட்டியாத்தை நாங்கள் குடியிருந்த காணியை பத்துப்பவுணுக்கு வாங்கியதாக சொல்வார். ஒரு ஏக்கர் நிலம் நகாத்தில் அதுதான் விலை இப்போது நிலத்தின்விலை நினைக்கவே நடுங்குகிறது. சும்மா சொல்லக்கூடா எட்டடி நிலமும் சுட்டுவிட இல்லை ஆனால் நிலம் வாங்கி குவிப்போரை என்னென்பது.

காசை காலங்காலமாக அதன் பெறு மதியை பணத்தை தங்கத்தின் விலையோடு ஒப்பிட்டுப் பேசிய காலம் அது. அந்தக் காலத்தில் கே.பீ. சுந்தராம்பாள் ஒரு படத்தில் நடிக்க ஒருலட்சம் வாங்கினாராம். அப்போது தங்கம் விலை வெறும் முப்பத்தாறு ரூபாதான். அது அப்போது அதிகமான தொகைதான். இப்ப இந்தக்கதையை கேட்பவருக்கு ப்பூ... என்றிருக்கும். ஆனால் நாடுகளிடையேயான வர்த்தகம் டொலருக்கு வருமுன் தங்கம்தான் பொருளாபதார அளவு கோலாக இருந்தது. நான் திருமணம் செய்த போது எனது கணவருக்கு மாதம் நூற்றிஇருபது ரூபா சம்பளம். நூற்றுப்பத்து ரூபா ஒரு தங்கப்பவுணின் விலை. நாநூற்று ஐம்பது ரூபா செலவில் தாலிக்கொடி வாங்கி கட்டினார். இப்போது தங்கம் பெறுமதியற்றதாக தெரிகிறது ஏனெனில் எட்டாத பழம் புளிக்கும்தானே.

மாடு வாங்கும் வியாபாரிகள் மிகச் சிலரே இருந்தனர். அழி மாட்டுக்காக மாடுகளை வாங்கவும், வியாபாரத்திற்காக மாடுகளை வாங்கவும் உள்ள தரகர்கள். இப்படி கால்நடையில் தமது பொழுதை வீணடிக்க முடியாது. போக்குவரவுக்கு பஸ்ஸை பயன்படுத்தினாலும் வரும்போது சில படியாத மாடுகளைள கொண்டு வருவது மகாகஸ்டம். (படியாத மாடுகள் என்பது மனிதர்களின் கைப்பிடிக்குள் அடங்காத திமிர் மாடுகள்) எனவே மாட்டு வியாபாரி கள் 'வேட்டைக்கடா' வைத்திருப்பார்கள். வேட்டைக்கடா என்பதாவது ஒரு மாடு தான். பயிற்றப்பட்ட மாடு. வியாபாரி புதிய மாட்டை அவிழ்த்ததும் இந்த வேட்டைக்கடாவின் கழுத்தோடு அதன் கழுத்தையும் பிணைத்துவிட்டு கலைத்து வீதியில் விட்டுவிட்டுப போய்விடுவார். வேட்டைக்கடாவானது. ஏப்படியாகிலும் அந்த புதிய மாட்டை இழுத்துக் கொண்டு எசமானின் பட்டிக்கு வந்து விடும். சில வேளை இரண்டு மூன்று நாட்கள்கூட ஆகலாம். வேட்டைக்கடாவான மாடு புதிய மாட்டை இழுத்துக்கொண்டு வந்து விடும்.

அப்படியே இன்றைக்கு இது சாத்தியமா எனப்பாருங்கள். வழியிலேயே கள்வர்கள் இரண்டு மாட்டையும் ஆட்டையைப் போட்டு விடுவார்கள். தன்னுடையது அல்லாத எந்தப் பொருளையும் தொடுவதற்கு மக்கள் பயந்தார்கள். அதற்காக திருடர்கள் இல்லையென்று அர்த்தம் இல்லை அவர்களும் தமக்குள் ஒரு நெறி முறையை வைத்துக் கொண்டு திருடினார்கள். போகட்டும் இன்றைய பணத்தை நாம் பவுணை வைத்து கணக்கிட முடியுமா, அல்லது பவுண்தான் ஒரே விலையில் ஒவ்வொருநாளும் இருக்கிறதா?

தமிழ்க்கவி

சாகித்திய எழுத்தாளர்

மருதம் பசுமை நகர்

Marutham Green City

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி

B – 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)

C – 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்

நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km

உள்ளக வசதிகள்

- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

0777 43 55 57

பெருங்காடு

காலக்கவிதை

பெருங்காடு எங்கள் பனங்காடு
வெட்ட வெட்ட விழுந்த பச்சை ஓலையை
ஊர் சேர்ந்திழுக்கும் சனக்காடு
உடும்புலாவும் ஊர்முயல் பதுங்கிமறையும்!

பனங்காட்டு பெரும் வெட்டவெளியில்
காலை வெயிலில் பச்சையோலை பாதி காயும்
கடல்மடியில் மாலைவெயில் மேற்கே படுக்கையில்
படை படையாய் ஊர் கூடும் பனங்காட்டில்

பாதி காஞ்சு புஞ்பட்ட பனையோலையை
ஊரும் உறவும் இடமும் வலமும் மாறிமாறி எறிய எறிய
அப்பன் அண்ணன் அடிவைத்து கால் மிதிக்க மிதிக்க
வரிசையில் மிதிபட்டு போகும் பனையோலை

பனையிடையே ஊர்ந்துலாவும் உடும்புபோல்
அடியிடையே மிதியோலை வரிசை போகும்
அடி,பிடிபட்ட உடும்புவால் தலை திரும்புவதுபோல்
வரியோலை தலை திரும்பி வரிசைபோகும்

செக்குமாடு போல் மிதிவட்டத்தில் சுற்றும் ஒருவர்
எறிகரம் வாங்கி மிதிகரம் இடுவார் ஓலைகளை
ஓலைக்கரம் பார்த்து மாரி உச்சிமேடு
வேயக் காத்திருக்கு!

சி.வசிகரன்.